கச்சாயூர் கவிஞர்
சுகசீவன்

பாலர் பாமலர்
நாற்பது
40

வெளியீடு:-
கச்சாய்த் தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

€ 1,50

440

பாலர் பாமலர் நாற்பது

40

கச்சாயூர்ப் பண்டிதர், இளைப்பாறிய அதிபர்
கவிஞர் சுக-சீவரத்தினம்

கச்சாய்த் தமிழ் இலக்கியமன்ற வெளியீடு
ஐப்பசி - 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு	:-	பாலர்பாமலர் நாற்பது 40
முதற்பதிப்பு	:-	ஐப்பசி 2001
பதிப்புரிமை	:-	ஆசிரியருக்கே
பிரதிகள்	:-	1000
விலை	:-	ரூபா **50**/=
வெளியீடு	:-	கச்சாய்த் தமிழ் இலக்கிய மன்றம்
அச்சுப்பதிவு	:-	A.R.S. பிரிண்டேர்ஸ் - சாவகச்சேரி

Palar Pamalar Natpathu
By
Kavignar Sugaseevan
Copyright
Published by
Kachchai Tamil Illakkiya Mantram.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

தாயகத் தாரணி சங்கட வாழ்வதால்
வாய்ப்போ வளமோ வருவது வரட்டுமென்று
நாடுகள் பற்பல ஆயினும் "சுவிஸ்'தான்
ஊடகம் அத்தொடு ஓங்குநல் மலைவளம்
பெற்றது என்பதால் பேசுவர் பெரிதாய்
உற்றனர் அங்கெம் உறவினர் மாணவர்
நண்பர்கள் மற்றும் அயலவர் இன்னுமெம்
மண்ணகம் ஈழத்து எவரே யாயினும்
யாவர்க்கும் இந்நூல் சமர்ப்பணம் ஆகுக
ஆவலில் ஊக்கம் உதவியோர் சான்றோர்க்கும்
ஆராஅன்பில் அகம்நிறை நன்றிகள்
பேரா தரவு தொடர்க பெயர்த்துமெ
வாழ்வியல் எல்லாம் வளமெல்லாம் பெற்றுநீர்
வாழ்க நெடுநாள் மகிழ்ந்து.

நூலாசிரியர்
கச்சாய்த் தமிழ் இலக்கிய மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரும் முன்

இலக்கியப் பணியில்
என்றும் உலகோங்கும்
தலைமை இவற்றுள்ளே
தண்ணார் கவிக்குண்டு
சங்கத்துச் செய்யுளொடு
சார்ந்து பலவாண்டாய்
எங்குங் கவிதைமலர்
என்றும் மலர்ந்துளது
பொங்கும் கவிஞர்களோ
புதிதுபுதி தாயென்றும்
எங்கெங்கோ இருந்து
இனிய குரல்கொடுத்தல்
தங்கத் தமிழ்க்கவிதை
தக்ககலை என்பதனால்
ஆக்கப் பணியொன்றில்
அதுவே சிறந்ததெனப்
பாக்கள் இயற்றிப்
பாலர்க்கு அளிக்கவென
இங்கும்நான் கொண்டேன்
இப்பணியை ஏற்றுடுவீர்
சங்கைத் தமிழ் கூறும்
நல்லுலகீர் நன்றி பல
சின்னக் கவிஞன்யான்
சேருஞ் சிலபிழைகள்
என்னிற் பெரிய
இனிய தமிழறிஞீர்
மன்னிப்பீர் என்றும்
மனதால் அளிக்கின்றேன்
இன்ப வணக்கம் இனிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டுரை

காலத்தின் தேவை கருதி சமகாலச் சீரிய நற் சிந்தனைகள் மேலோங்கும் வண்ணமும் அத்தகைய செயற்பாடுகள் என்றும் நின்று மேலோங்கி மானிடவியல் வாழ்வை வளப்படுத்தவும் உதவுபவையே படைப்பு இலக்கியங்கள். இத்தகைய சிறப்புடைய படைப்பு இலக்கியங்களில் ஒன்றாகிய பாலர் பாமலர் நாற்பது (40) என்னும் பனுவலை வெளியிடுவதில் எம்மன்றம் பெருமகிழ்வு அடைகின்றது.

இந்த வகையில் படைப்பாளிகளை ஊக்கிவிடும் எண்ணத்துடனும், அறிவுசார்ந்த செயற்பாடுகளால் பயன்பெறுவோர்க்கு உதவும் வண்ணமும், கதிரை மலைக்கோவை, எங்கள் கதிர்காமம், கதிரமலைப் பிரபந்தம், பிரபந்தத்துக்கு ஒரு அநுபந்தம், குடும்ப வாழ்வில் அத்துவிதம் ஆகிய கச்சாயூர் - செந்தமிழ்ப் புலவர், கோவைகிழார், சந்தக்கவிமணி காலஞ்சென்ற திரு. சி. சின்னையா அவர்களின் நூல்களை அறுபதுகளிலும், எழுபதின் முற்பகுதியிலும் வெளியிட்டோம்.

1992ல் எங்கள் கச்சாயூர்ப் பண்டிதரும், கவிஞர் சுகசீவனும் ஆகிய திரு. சு.க. சீவரத்தினம் பாடசாலை அதிபர் அவர்களின் பத்துக்கவிதைகள், பாலர் பாமலர் பன்னிரண்டு ஆகிய இரு நூல்களையும் வெளியிட்டு வைத்தோம்.

இந்நூலாசிரியரின், பாலர் பாமலர் நாற்பது 40 பனுவலுக்கு வாழ்த்து வழங்கிய "அளவையூர் சஞ்சீவி" அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கட்கும், மலைச்சிகரம் போன்ற பாரிய உண்மைகள் அடங்கிய நீண்டதோர் அணிந்துரையை எழுதித் தந்துதவிய கல்வயலூர்க் கவிஞர், கலாநிதி இராமுப்பிள்ளை முருகையன் அவர்கட்கும் எங்கள் உளங்கனிந்த நன்றிகள்.

எம்மன்றம் 1992ல் வெளியிட்ட ஆசிரியரின் பாலர்பாமலர் பன்னிரண்டு நூலுக்கு அருமருந்தன்ன அணிந்துரையாக எழுதித்தந்து எம்மண்ணுக்கு பெருமை சேர்த்த மறைந்தும் மறையாத அமரர் 'ஆத்மஜோதி' நா. முத்தையா அவர்களை இவ்வேளை நினைவு கூர்ந்து அவரின் ஆத்மசாந்திக்காக இறைஞ்சி நின்று அந்த அணிந்துரையையும் மீள்பிரசுரம் செய்கிறோம். இது அன்னாருக்கு நாம் ஆற்றும் ஒரு தார்மீகத் தொண்டாகக் கருதுகின்றோம்.

இன்னைறய சூழலில் இடப்பெயர்வால் எம்மவர்க்கு ஏற்படும் அவலங்களுக்கு மத்தியிலும் கவிஞர் சுகசீவனின் பாலர் பாமலர் நாற்பது 40 பாமலரை வெளியிடுவதனால் தமிழ்கூறும் நல்லுகம் இறும்பூது எய்தும் என நம்புகின்றோம். இவருடன் மேலும் பல சான்றோர் பணிகள் தொடர இறைவனைப் பிரார்த்தித்து இவ்வெளியீட்டு உரையை நிறைவு செய்கின்றோம்.

"வாழ்வே இலக்கியம், இலக்கியமே வாழ்வு"

சி. கணேசலிங்கம் — தலைவர்

இ.பாலசுப்பிரமணியம் — செயலாளர்

கச்சாய்த் தமிழ் இலக்கிய மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவையூர் சஞ்சீவி,
அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள் வழங்கிய

வாழ்த்து.

திருமலரும் கச்சாயூர் வாழும் செம்மல்
சீவரத் தினமென்னும் கவிவல் லாளன்
கருமலரும் பாலர்பா மலர்நாற் பத்தைக்
கனிமலரும் கற்பகம்போல் யாத்த ளித்தார்
உருமலரும் சிறுவர்க்கும் யாவ ருக்கும்
உளம்மலரும் தேனாகி மலரக் கண்டேன்
குருமலரும் நெடுங்கிரிபோல் இந்த நன்னூல்
குணம்மலரும் கங்கையைப்போல் வாழி வாழி

ஐம்பூதச் செயற்பாடும் அவற்றின் போக்கும்
அறிவாலே அறிகின்ற தெய்வப் பண்பும்
நம்பாலே தமிழ்விளங்கும் ஞால மாண்பும்
நயந்தஎதிர் காலத்தில் அமையும் நோக்கும்
அம்பாளின் கருணையினால் அகத்தி லாய்ந்தே
அவனியெலாம் தமிழ்ப்பழங்கள் சொரியத் தந்தார்
செம்போது வீற்றிருப்பாள் கருணை பொங்கி
திகழும்"சுக சீவன்"சிவன் போல வாழி.

- சுபம் -

அருட்கவி சீ. விநாசித்தம்பி
தலைவர், இந்து சமயப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

குச்சாயூர் சு. க. சீவரத்தினம் அவர்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் யான் ஆசிரியப்பணி ஆற்றிக்கொண்டிருந்த அய்ம்பதுகளின் பிற்பாதியிலே, அக்கல்லூரியின் ஒளி வீசிக்கொண்டிருந்த அய்ந்தாறு மாணவர்களுள் ஒருவர். தமிழ்ப் பேச்சிலும் எழுத்திலும் மிகுந்த நாட்டம் கொண்டிருந்தவர். மாணவர் மன்றங்களிலும் கலைவிழா மேடைகளிலும் பரிமளிப்பாகப் பங்கு கொண்டவர். பாட்டியற்றும் கலையிலும் விருப்பார்வம் மிக்கிருந்தவர். ஆசிரியப் பெருமக்கள் சிந்தையில், சிறந்த மனப்பதிவுகளை ஏற்படுத்தும் திறன் அவரிடம் இருந்தமைக்கு, அவர்தம் பள்ளிப்பருவம் சிறந்த சான்றாய் அமையலாயிற்று.

அந்தக் காலத்தில் அவரிடமிருந்த கலைத்தமிழ் ஈடுபாடானது, அவரை ஒரு பண்டிதராக்கிற்று. பண்டிதர்கள் எல்லோரும் பாவலர்களாயும் இருப்பர் என்பதற்கு எதுவித உத்தரவாதமும் இல்லையன்றோ! சுகசீவனோ, தம் தமிழ்ப் புலமையினைச் செழுமைப்படுத்திக் கொண்ட அதே வேளையில் பாட்டுக்களை விரைந்தியற்றும் ஆற்றல் வாய்ந்த பாவலராகவும் மலர்ச்சி பெற்றார். ஆசிரியத் திருப்பணியையே தம் வாழ்க்கைத் தொழிலாகவும் வரித்துக்கொண்ட சுகசீவனார், கல்வியியற் சிந்தனைகளிலும் திளைத்துப் பயன்கொண்டார். அதனாலே தான் போலும், சிறுவர்கள் பாடி ஆடி மகிழ்வதற்கேற்ற பாடல்களை இயற்றி வெளியிடுவதில் அவர் மிகுந்த, ஆர்வம் கொண்டார். இதன் பேறாக, நல்ல பல பாடல்களை அறுவடை செய்யக் கூடிய பலன் அவருக்கு கிடைத்தது.

சிற்சில காலப்பகுதிகளில் அவர் தொடர்ந்து மவுனமாய் விடுவதும் உண்டு. சும்மா இருந்தால் இருப்பார். எழுந்தாரே என்றால்....

"பெருந்தாகம் தீர்க்கும் பெயல்"

[பெயல் - மழைப்பொழிவு]

முன்பு கடைப்பிடித்த மவுனக்கடன்களை எல்லாம் ஈடுசெய்யும் வகையிலே, வட்டியும் குட்டியும் முதலுமாக வாரி வாரித் தந்துவிடும் வல்லமை அவரிடம் உண்டு. பல ஆண்டுகளின் பின்னர், அண்மையிலே அவரை யான் காண நேர்ந்தபொழுது, இளம் பொழுதில் அவர் தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வினில் எழுந்த கலை உந்தலின் ஊற்றுக்கண், இன்னும் தயார் நிலையில் 'எவறெடி'ஆக நிற்கின்றமையை ஓர்ந்தபோது, பெருமையும் மனப்பூரிப்பும் உண்டாயின.

இளஞ்சிறார்க்கென 1992ல் அவர் வெளியிட்ட **'பாலர் பாமலர் பன்னிரண்டு'** என்னும் பனுவலில், 'கல்வித் தெய்வம், 'செங்கதிர்ச் செல்வன்', முழுமுதல் இறையவன் பற்றிய தெய்வப் பாடல்களும், பெற்ற தாய் தமிழ்த்தாய், மகாத்துமா காந்தி, ஆறுமுக நாவலர், சோமசுந்தரப் புலவர் ஆகிய குரவர் பெருமக்களின் மாண்பு பேசும் சான்றோர் பாடல்களும்; மழை, மலை பற்றிய இயற்கைப் பாடல்களும், பசு, நாய் ஆகிய வளர்ப்புப் பிராணிகள் பற்றிய அன்பாதரவுப் பாடல்களும் இடம்பெறலாயின.

இவைபற்றி, கல்வயல் வே. குமாரசாமி அவர்கள்

"கவிதை அமுதச் சுவைதேர்ந்த
கச்சா யூரில் சுகசீவன்
குவியும் உணர்வால், குழந்தைகளே
குதித்து மகிழச், சிந்தைக்கும்
செவிக்கும் இனிய பாதந்தார்
சிறந்து வாழ்க அவர்சேவை"

என்று விதந்து வாழ்த்தியிருந்தார். இந்தப் பாராட்டு வாழ்த்துக்கு ஏற்ப, **சுகசீவன்** அவர்கள் ஏராளமான, இதமான, பயன் சிறந்த பாட்டுக்களை மேன்மேலும் இயற்றுதல் வேண்டும் என்னும் தணியாத் துடிப்புடனும் எழுச்சி மிகுந்த ஊக்கத்துடனும் இன்றும் இயங்கி வருகிறார். சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் ஏற்ற நல்ல பல ஆக்கங்களைத் தந்திடுவதற்கு, **சுகசீவன்** திட்டமிட்டு முயன்றவாறே இருப்பது, நம் சூழல் சிறந்திட உஞ்ற்றும் சீரிய தவம் எனக் கொள்வது பிழையாகாது.

"வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி சார்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார், பள்ளியெழுச்சி பாடிய பாரதிப் பெரும்புலவனார். அன்னவரின் வேட்கைத் தாகத்தினையும், இலட்சிய ஆவேசத்தினையும் தமதாக்கிக் கொண்டு, கச்சாயூர்க் கவிஞர் சுகசீவன், மேலும் பல பெறுமதி வாய்ந்த கலைப்படையல்களைத் தந்து, நம்மவர்க்கு நலம் செய்தல் வேண்டும். பண்பாட்டுப் பற்றாளர் எவரும் மனப்பூர்வமாக விரும்பி வரவேற்கக் கூடிய மலையிலக்கு இதுவாகத்தான் இருக்க முடியும்.

கவிஞர் **சுகசீவன்** அவர்கள் பல கவியரங்குகளில் பங்கு கொண்டும் சில கவி அரங்குகளில் தலைவராகவும் செயற்பட்டுள்ளார். வானொலிக் கவியரங்கிலும் பங்குபற்றியவர். நூற்றுக் கணக்கான நினைவு மலர்களின் மலராசிரியராகவும் செயற்பட்டு இன்னமும் அப்பணியில் தொடர்கின்றார்.

அந்நாட்களில் ''சுதந்திரன்'' பத்திரிகையில் பல கவிதைகள் வெளிவந்தன. கவிதை நூல்களின் விமர்சகராகவும் இருந்துள்ளார். அண்மைக் காலமாக யாழ்ப்பாணப் பத்திரிகைகளிலும், சுடரொளியிலும் இவரது கவிதைகள் வலம்வந்து கொண்டிருக்கின்றன. மணிவிழா, பவள விழா, பொன் விழாக் கவிதைகள் இராமபக்த ஹனுமான் பக்திப் பாடல்கள் யாவும் நேரிசை வெண்பாவில் அமைந்து இவரின் இலக்கணமரபறிவைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

பாலர்க்கு என்று இவர் தருகின்ற **பாலர் பாமலர்** நாற்பது 40 இவரின் இரண்டாவது பாலர் கவிதை நூலாகும். இவரின் பாடல்கள் மிகவும் எழிமையாகவும், இசை இன்பம் செறிந்ததாகவும் அமைக்கின்றன. பலபாடல்களில் காணப்படும் துள்ளல் ஓசை எம்மை எல்லாம் துள்ள வைக்கிறது. மிகச் சிறப்பான இக்கவிதை நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.சுகசீவன் அவர்களின் கவிதைப்பணி தொடர்க என வாழ்த்துகின்றேன்.

சுகசீவன் நெஞ்ச ஊற்றுச்
சுரப்பிகள் ஊக்கம் பெற்று
நிகரேதும் இல்லா இன்ப
நெடும்சுனைப் பொங்கல் ஆகி,
தகவாளர், திறனாய் கின்ற
சதுரப்பா டுடைய சான்றோர்
புகழ்பேசி வியக்கும் வண்ணம்
புதுப்புனல் புரண்டோ டட்டும்.

கவிஞர். இ. முருகையன்

24-05-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆத்மஜோதி" ஐயா உயர்திரு நா. முத்தையா
அவர்கள் அளித்த

அணிந்துரை

பண்டிதர் சீவரத்தினம் அவர்களையும் அவர் குடும்பத்தினரையும் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நன்கு அறிவேன். அவரது மனைவியார் பாலர்களுக்கு முன்மாதிரியாகக் கற்பிக்கக் கூடிய சிறந்த ஆசிரியை.

பண்டிதர் அவர்கள் சிறந்த கவிஞர், சிறந்த பேச்சாளர், சிறந்த ஆசிரியராகப் பத்தாண்டுகளுக்கு மேலும், தனிச்சிறப்புடைய அதிபராக ஏறத்தாழ இருபதாண்டுகளாக இன்னமுஞ் சேவையிலுள்ளார். மனைவியாருடைய கேள்விப்படி குழந்தைகளுக்கான "பாலர் பாமலர் பன்னிரண்டு" என்ற நூலை வெளியிட்டுள்ளார். குழந்தைகளுக்கான இப்பாடல் தொகுப்பு அவரது கவித் திறமையையும், ஆசிரியத் திறமையையும் எமக்குகக் காட்டுவதாகும்.

இறைவனைப் பற்றிய பாடலில்,
துன்பம் வந்தால் அன்னவனைத்
துதிப்பார் மட்டும் அவ்வேளை
பின்னர் மகிழ்வு வந்திட்டால்
பிரியம் கொள்ளார் அவன்மேலே
இப்பாடல் இன்றைய சமூகத்தின் நிலைக் கண்ணாடி என்றே கூறலாம்.

கல்வித் தெய்வம் என்ற பாடலில்,
வெள்ளை மனது கொண்டேநாம்
விரும்பி அவளை வணங்கிட்டால்
அள்ளிக் கலைகள் அளித்திடுவாள்
அதனால் வாழ்வில் உயர்ந்திடுவோம்.
என்ற பாடல் "மனத்துக்கண் மாசிலனாதல் அதனைத் தறன்" என்ற குறளை நினைவூட்டுகிறது.

"அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்" என்பதன் விரிவுரை போலஷ
அம்மா எந்தன் தெய்வம்
ஆமாம் உண்மை யதுவே
என்னைப் பெற்ற அம்மா
இனிய தெய்வம் ஆவாள்
என்னும் இப்பாடல் அமைந்துள்ளது.

பாலைப் பொழியும் பசுமக்கு
பக்குவ மாக அதைக்கய்ச்சி
காலை மாலை வேளைகளில்
கனிவாய்த் தருவாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாடலைப் பாடும்போது பசும்பாலில் கற்கண்டு போட்டுக் காய்ச்சிக் குடிப்பது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. இதனுள்ளே புகுந்தால் இப்படி எத்தனையோ முத்துக்கள் உண்டு. அவற்றைத் தேடி எடுங்கள். அதனால் வாழ்வை வளப்படுத்துங்கள்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த "பாலர் பாமலர் பன்னிரண்டு" என்னும் நூலை எழுதித்தந்த பண்டிதர், பாடசாலை அதிபர், கவிஞர், கட்டுரையாளர், விமர்சகர், சொற்பொழிவாளன், தத்துவஞான உணர்வுடையோனாகிய திரு. சுக-சீவரத்தினம் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து வெவ்வேறு துறைகளில் பல்வேறு படைப்புகளைத் தந்து தமிழர் தம் சமகாலத் தேவைகளுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்தித்து ஆசிகளை அளிக்கிறேன்.

கண்டி வீதி,
சாவகச்சேரி.
20-06-1992

திரு. நா. முத்தையா

பாடுகின்ற புலவரெல்லாம் புலவர் அல்ல
பாட்டென்றால் பண்டிதர்க்கே உரிமை அல்ல
ஓடுகின்ற பெருவெள்ளப் பெருக்கே போன்று
உணர்ச்சி தனைஊட் டுபவன் "உயர்கவிஞன்"
ஏடுகள்தான் எத்தனையோ இதனைக் கூறி
ஏற்றுகின்ற இக்கால வேளை தன்னில்
"பாடுகளைச் சுமந்து" படைப்பு இலக்கியங்கள்
பண்ணுகின்ற கவிஞர் வாழ்வர் ஞாலத்தென்றும்

- கவிஞர் சுகசீவன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

01 தெய்வப் பாடல்கள்

- கூட்டுப்பிரார்த்தனைப் பாடல் 01
- இறைவன் 04
- கல்வித்தெய்வம் 05
- செல்வமளித்திடுவாய் 06
- ஞாலத்தேவன் 07
- இயேசுபிரான் 08

02 சான்றோர்

- கன்னித்தமிழாய் மாற்றிவிடு 09
- இனியதெய்வம் ஆவாள் 10
- சுதந்திரச் சிற்பி 11
- பாலபாடம் தந்தவர் 12
- எங்கள் தங்கத் தாத்தா 13
- பாரதியார் 14
- விபுலானந்த அடிகள் 15

03 பஞ்ச பூதங்கள்

- நிலம் 16
- நீர் 17
- தீ 18
- காற்று 19
- ஆகாயம் 20

04 கல்வி

- கல்வி 21
- முத்திறன்கள் 22
- ஆசிரியர் 23
- விஞ்ஞான விந்தைகள் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05 இயற்கை

- மலையே! மலையே!! 25
- அழகாய் மயிலை ஆட்டவா 26
- ஆறு 27
- கடல் 28
- மரங்கள் 29
- பனைமரம் 30
- தென்னைமரம் 31
- மலர்கள் 32
- அழகு 33

06 பொது

- உலகம் உண்டு 34
- மனம் (அகம்) 35
- சுகாதாரச் சீர்கேடு 36
- போஷாக்கு 37
- பெண்ணின் மகிமை 38
- கண்ணுறங்கு கண்மணியே 39

07 அன்பு - ஆதரவு

- அன்பு 40
- வெள்ளைப்பசு 41
- இனிய காவலன் 42

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தெய்வப் பாடல்கள்

அருள்மிகு கச்சாய்ப்
புங்கடிப் பிள்ளையார்

கூட்டுப்பிரார்த்தனைப் பாடல்

புங்க டியிற் பிள்ளையார்
புதுமை யான பிள்ளையார்
யாண்டும் நாங்கள் கும்பிடும்
ஆனை முகப் பிள்ளையார்
பள்ளிக் கூடச் சிறுவர்நாம்
பாடி நித்தம் கும்பிட
அள்ளி அள்ளி அருள்தரும்
ஆனை முகப் பிள்ளையார்
(புங்கடியிற்)

கச்சாய் ஊரில் உள்ளநற்
காற்ற டிக்கும் கடற்கரை
உச்சி மணல் மேட்டிலே
ஊருக் கான பிள்ளையார்
உண்மை யருள் செய்கின்ற
ஓங்கா ரத்துப் பிள்ளையார்
எண்ணி மனத் திறைஞ்சிடின்
என்றும் அருள் செய்பவர்
(புங்கடியிற்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்ட வளம் சிறந்திடத்
தொழில் வளங்கள் பெருகிட
நாட்ட முடன் அருள்செயும்
நல்ல நல்ல பிள்ளையார்
பாட்டில் இசை பாடுவோர்
பாடு நித்தம் போக்கிடக்
காட்டும் அருள் பிள்ளையார்
கச்சா யின்நற் பிள்ளையார்

(புங்கடியிற்)

சாதி மத பேதங்கள்
தவிர்க்க அருள் செய்பவர்
சூது வாதிலாது மக்கள்
சுதந்தி ரமாய் வாழவே
ஆதி உள்ள மூர்த்தியாய்
அருளும் நல்ல பிள்ளையார்
வேத நெறி தழைக்கவே
விரும்பும் நல்ல பிள்ளையார்

(புங்கடியிற்..)

வைகா சியிற் பிள்ளையார்
மார்க ழியில் வைரவர்
ஆகா பொங்கல் மடைகளே
அருளும் பொங்கல் மடைகளே
மாசி சிவ ராத்திரி
மற்ற மாத வேள்வியும்
பேசும் பெருந் தினமுடைப்
பிரிய மான பிள்ளையார்

(புங்கடியிற்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவ ணியிற் சதுர்த்தியும்
அடுத்து நவ ராத்திரி
ஐப்ப சியிற் ஷஷ்டியும்
ஆதிரை நாள் முழுவதும்
பிள்ளை யாரின் பெருங்கதை
பிரிய மான நாளெல்லாம்
பெரிய பூசை காணவே
பேசிப் பக்தர் கூடிடும்

(புங்கடியிற்..)

வீர பத்திரப் பெருமானும்
மேவும் பத்திர காளியும்
காத்தற் கடவுள் வைரவர்
கருணை யுள்ள காளியும்
ஆதி மூல விநாயகர்
அமர்ந்த பெருங் கிழுவையும்
நாகம் பிரான் தனித்ததாய்
நல்லபரி வார முள்ள

(புங்கடியிற்...)

வாழ்க வாழ்க என்றுநாம்
வாழ்த்தும் நல்ல பிள்ளையார்
வாழ்வு நன்கு சிறக்கவே
வணங்கும் எங்கள் பிள்ளையார்
சூழ்க நல்ல சுகமெல்லாம்
சொல்லி நாங்கள் வணங்கிடின்
ஆழி நீரைப் போலவே
அருளை என்றுந் தருபவர்.

(புங்கடியிற்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன்

அன்பு வடிவம் அவனன்றோ!
அருமைத் திருவும் அவனன்றோ!!
இன்ப வடிவம் அவனன்றோ!!!
ஏத்துங் கடவுள் அவனன்றோ.

துன்பம் வந்தால் அன்னவனைத்
துதிப்பார் மட்டும் அவ்வேளை
பின்னர் மகிழ்வு வந்திட்டால்
பிரியம் கொள்ளார் அவன்மேலே

எல்லாந் தெரியும் அவனுக்கு
என்றும் இன்பம் எமக்களிப்பான்
சொல்லில் அவனின் அன்பதனைச்
சொர்க்கந் தாயின் மேலாகும்

யாவும் அவனால் ஆகிவிடும்
யாண்டும் அருளே அவன்வடிவம்
பாவில் பலரும் துதித்திடுவர்
பரமன் அவனே இறையன்றோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித் தெய்வம்

கல்வித் தெய்வம் கலைமகளைக்
கரங்கள் தூக்கித் தொழுதிடுவோம்
வல்லமை மிக்க அறிவுபெற
வாழ்வில் அவளே துணைசெய்வாள்.

கரும்பும் பாலும் கற்கண்டும்
கண்ணிய மாக நாம்படைத்துத்
"தருவாய் கல்வி" தாயேநீ
தடைகள் இன்றிச் சாலவுமே.

விரும்பி இசையை நாம்பயில
வீணை காட்டி விளங்கிடுவாள்
அருமைக் கல்வி தருவனென
அழகாய் ஏடு காட்டிடுவாள்

வெள்ளை மலரில் வீற்றிருப்பாள்
வேண்டிய கலைகட் கரசியவள்
பள்ளிச் சிறுவர் நாமெல்லாம்
பாதம் போற்றி வணங்கிடுவோம்.

வெள்ளை மனது கொண்டேநாம்
விரும்பி அவளை வணங்கிட்டால்
அள்ளிக் கலைகள் அளித்திடுவாள்
அதனால் வாழ்வும் உயர்ந்திடுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வ மளித்திடுவாய்

செந்தா மரையிற் செறிந்திருந்து
செல்வம் எமக்கு அளித்திடுவாள்
சுந்தரி யாக வீற்றிருப்பாள்
சுகமும் அதனால் வந்திடுமே.

செல்வம் இன்றேல் சீர்குலையும்
சேர்ப்போம் துணிவாய்த் தொழில்செய்து
இல்லை யென்று சொல்லாமல்
எவர்க்கும் உதவி செய்திடுவோம்.

அல்லும் பகலும் அதைத்தேடி
அவசிய தேவைக் கெடுத்திடுவோம்
ஆக்கம் பிறர்க்கும் அளித்திடுவோம்
அதனால் செல்வம் செல்வமே.

நேரிசை வெண்பா

செந்தா மரையிற் செறிந்திருக்கும் சோதிமுகச்
சுந்தரியே எங்கள் சுகச்செல்வி - முந்து புகழ்
தந்திடுவாய் செல்வவளம் தானதனை நாள்தோறும்
வந்தனங்கள் தந்தேன் மகிழ்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலத்தேவன்

செங்கதிர்ச் செல்வா!
இங்கெழுந் திடுவாய்
எங்களுக் கொளியை
இன்புடன் தருவாய்

பொங்குமுன் ஒளியாற்
பூமியும் வாழும்
புண்ணியம் உனக்கும்
பொலிந்திடும் நித்தம்

நல்ல மழைக்கும்
நானில மக்கள்
நாளும் பொழுதும்
நம்புவர் உனையே

காலம் காட்டிக்
காவலுஞ் செவ்வாய்
ஞாலத் தேவா!
வாழிநீ!! வாழி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு பிரான்

இயேசு பிரான் அவதரித்தார்
மறப்பார் மறுப்பார் யாரிங்கு
தேவை கருதி மனுக்குலத்தார்
தேடும் பாவம் தொலைத்தாரே.

ஆவி உடல்பொருள் மூன்றையும்
அவனிக் காக அர்ப்பணித்தார்
மேவுந் துயரைத் தான்தாங்கி
மேதினி வாழ உயிரீய்ந்தார்

பாலன் யேசு பிறந்ததினால்
பாரில் மக்கள் வளம்பெற்றார்
காலன் வந்து கைதூக்கும்
காலம் வரைக்கும் நாமெல்லாம்

யேசு சொன்ன போதனையை
ஏற்றிப் போற்றிக் காத்திடுவோம்
கேளுங் கள்கொ டுக்கப்படும்
"தட்டுங் கள்திறக் கப்படும்"

கன்னம் தன்னில் அடிப்பவர்க்கும்
கருணை யைநீ செய்யென்றார்
இன்னும் இவைபோல் போதனைகள்
ஏற்றம் ஏற்றம் ஏற்றமே.

சைவம் நல்ல சமயம்
சார்ந்த யேசு புத்தர்
முகம துநபி யுங்கூட
முந்து சமயம் வாழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றோர்

கன்னித் தமிழாய் மாற்றிவிடு

இன்பம் பொங்குந் தமிழைப்போல்
இனிய மொழிகள் வேறில்லை
அன்பை அள்ளித் தருகின்ற
அழகு தமிழைத் தினம்பேச

தெய்வத் தமிழைக் காத்திடுவாய்
தினமும் அதனைப் படித்திடுவாய்
கையால் எழுதும் எழுத்தையெல்லாம்
கன்னித் தமிழாய் மாற்றிவிடு

செய்யுஞ் செயல்கள் தமிழ்வாழச்
சேர்ந்தே ஒன்றாய் நீயுழைப்பாய்
வையந் தன்னில் தமிழன்னை
வாழ நித்தம் வழிசெய்வாய்

"தமிழுக்கு அமுதென் றேபேர்"
இமையினைக் காப்பது போல
என்றுமே நாமதைக் காப்போம்
எட்டுத் திக்கினுஞ்சே ரவேநன்றாய்

தமிழிற் பாட்டுப் பாடிடுவாய்
தப்பா மற்கதை சொல்லிடுவாய்
அமுதத் தமிழை அப்படியே
அருமை யாக வளர்த்திடுவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய தெய்வம் ஆவாள்

அம்மா எந்தன் தெய்வம்
ஆமாம் உண்மை யதுவே
என்னைப் பெற்ற அம்மா
இனிய தெய்வம் ஆவாள்

புழுதி போக்கி என்னைப்
புதிய நீரில் ஆட்டி
அழுதி டாமல் முத்தம்
அணைத்தே அன்பாய்த் தருவாள்

பொன்னைப் பூட்டிப் பார்ப்பாள்
பொட்டும் வைத்துப் பார்ப்பாள்
என்னைக் கண்ணைப் போல
என்றும் அம்மா காப்பாள்

பிள்ளை பிள்ளை என்று
பெருமை யாகச் சொல்வாள்
கிள்ளி என்னைச் செல்லம்
கேட்க ஆசைப் படுவாள்

பள்ளிக் கூடம் போகப்
பாப்பா என்று அழைத்து
வெள்ளை உடுப்புப் போட்டு
விருப்ப மாக விடுவாள்

அம்மா எந்தன் தெய்வம்
அவளே எனக்கு உலகம்
அம்மா இன்றி வாழ்வில்
ஆவ தொன்று என்ன?

எம்மால் ஆகும் செயலை
என்றும் இனிமை யாக்கி
அம்மா புகழை நாளும்
ஆக்கிக் காப்போம் வாழ்வில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரச் சிற்பி

காந்தித் தாத்தா நல்லவர்
கருணா மூர்த்தி யானவர்
மாந்த ருக்குள் நல்லவர்
மாணிக் கம்போல் ஆனவர்

சாந்தி உள்ளங் கொண்டவர்
சத்தி யத்தைக் காத்தவர்
சோந்தை என்ற வெள்ளையர்
சூழ்ச்சி தன்னை விரட்டினார்

இந்தி யாளம் தாயகம்
இங்கு வாழும் யாவரும்
எந்த நாளுஞ் சுதந்திரம்
ஏற்று வாழ்வோம் என்றவர்

தந்தை எங்கள் காந்தியார்
சத்தி யத்தின் காவலர்
இந்தி யாவின் சுதந்திர
இனிய சிற்பி யானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால பாடம் தந்தவர்

யாழ கம்மெம் வாழ்விடம்
யாவும் ஞான இன்பமே
நாளும் இங்கு வாழ்பவர்
நல்ல கொள்கை உள்ளவர்

நல்ல நகரம் யாழகம்
"நல்லை" இன்பப் பதியினில்
சொல்லில் வல்ல வீரராய்த்
தோன்றி னார்எம் நாவலர்

பால பாடம் தந்தவர்
பக்தி யான வார்த்தைகள்
பாலர் நாமும் விரும்பிடப்
பக்கு வமாய்த் தந்தவர்

ஆறு முக நாவலர்
அருமை யான பெரியவர்
நீறு வாழ வந்தவர்
நிமல னருள் பெற்றவர்

தெய்வம் தன்னை அன்புடன்
தினமும் அவர் வணங்கினார்
சைவம் தமிழ் இரண்டையும்
தமது கண்ணாய்ப் போற்றினார்

நல்ல தமிழ்க் காவலர்
நாளுஞ் சிவம் பேணிய
வல்ல வராம் நாவலர்
வாழ்க! வாழ்க!! வாழ்கவே!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தங்கத் தாத்தா

தங்கமான நாட்டிலே
தக்க நல்ல புலவராய்த்
தங்கத் தாத்தா வந்திட்டார்
தகுந்த பாடல் தந்திட்டார்
பொங்கும் இன்ப நவாலியாம்
புனித மான ஊரிலே
தங்கத் தாத்தா தோன்றினார்
சந்தப் பாடல் பாடினார்
ஆடிப் பிறப்பு நாளையே
ஆனந் தமாம் விடுதலை
பாடிப் பாலர் உள்ளத்தைப்
பரிவாய் நன்கு கவர்ந்திட்டார்
ஈழ நாட்டு வளத்தையும்
இனிய கன்னி ஊற்றையும்
வாழும் நல்ல கவிதையாய்
வடித்தெ டுத்துத் தந்தவர்
வீமா வேட்டை யாடவா
வேறு கத்தரி வெருளியும்
நாமாய் விரும்பிப் படிக்கவே
நல்ல தமிழிற் தந்தவர்
ஆடு கதறும் பாடலும்
அருமைச் செந்தமிழ்ப் பாடலும்
நாடு என்றும் மறக்குமா?
நவிலில் இரண்டுங் கண்களே
நவாலிச் சோம சுந்தரர்
நமக்குத் தந்த அமுதினை
அவா வுடனே போற்றுவோம்
அள்ளி நன்கே யருந்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியார்

"பாட்டுக் கொருபுலவன் பாரதி"
பாரில் மறவார் மறுப்பார்யார்
நாட்டில் மக்கள் வளம்பெறவே
நாளும் அவனே கவிசெய்தான்

கன்னித் தமிழாம் நாடதனை
நண்ணும் படியாய்ப் பலசொன்னான்
கன்னல் தமிழின் வண்ணத்தை
இன்னும் பலவாய் எடுத்துரைத்தான்

பெண்ணின் பெரிய விடுதலைக்கு
வண்ண வண்ணக் கவிசெய்தான்
திண்ணம் திருவாய் மகளிரெல்லாம்
சேர்ப்பர் பெருமை நமக்கென்றான்

ஒற்றுமைக்குப் பாடி நின்றான்
ஓங்கும் அதனால் உலகென்றான்
வேற்றுமை கள்நமக்குள்ளே
வேண்டாம் வேண்டாம் என்றிட்டான்

சாதி தன்னை ஒழித்திடவே
சாதனை கள்செய் யென்றான்
பேதம் நமக்குள் இல்லையென்று
பேசிச் சிறப்புச் செய்திட்டான்

பாஞ்சா லியின்சப தத்தை
பாமரர்க் கும்விளங் கிடவே
பாடி இலக்காய்த் தந்திட்டான்
பாரில் அவன்நிதம் வாழுவனே

பாரதி யின்கன வெல்லாம்
பாரில் பலித்து வருகின்ற
நேரம் இப்போ காண்கின்றோம்
நேசம் அவன்மேல் வைப்போமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபுலானந்த அடிகள்

கிழக்கு ஈழம் தந்த
கீர்த்தி மிக்க பெரியார்
முத்தமிழ் வித்தகர் ஆன
முதல்வர் விபுலா ஆனந்தர்

பண்டித ராக ஆகி
பட்டம் பெற்றதோ அறிவியல்
பத்தி ரிகையின் ஆசான்
பள்ளி பலவின் அதிபர்

வைத்த பற்பல சேவை
வையம் உய்ந்தது அவரால்
இசையின் நூலாய் யாழ்நூல்
இன்னும் இயலும் நாடகம்

முத்தமிழ் முழுமை பேணி
முத்தமிழ் வித்தக ரானார்
இல்லற வாழ்க்கை வெறுத்து
என்றும் அடிகள் ஆனார்

தமிழுக் காக வாழ்ந்த
தலைமைப் பெரியார் அவரே
தமிழர் இனமும் தமிழும்
தலைமை பெறவே வாழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

பஞ்சபூதங்கள்

நிலம்

நிலமின்றேல் உயிர்கள் இல்லை
நீள்நில மோபெரி தேதான்
ஆயின்கட லுலகில் மிகப்பெரிதே
வாயால் வளம்கூறல் மேல்கஷ்டம்

அகழ்வாரைத் தாங்கும் நிலப்பொறுமை
புகழ்பேசல் யார்க்கும் மிகஅரிதே
சுகம்பெறவும் சூழல் வழிவகுக்கும்
சுத்தம் தினம்பேணல் அவசியமே

மரம்செடி கொடிகள் மட்டுமா
மனித விலங்குகள் கூடத்தான்
சீவிக்க வைக்கும் சஞ்சீவி
சிறந்த நல்ல நிலமன்றோ!

நிலத்தைத் தோண்டின் நீர்வருமே
நீரும் இன்றேல் வாழ்வில்லை
பலத்தைப் பெறநல் அப்பியாசம்
பாரில் நின்றே செய்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்

நீரை நாங்கள் குடிக்கின்றோம்
நீரோ இல்லை என்றிட்டால்
வாயும் நாவும் வரண்டுவிடும்
நீரின் பெருமை அறிவோமே.

மழையின் நீரோ டாற்றுநீர்
மற்றுக் கடலின் ஊற்றுநீர்
கடலில் உண்டு ஆகையினால்
கடவுள் 'முந்நீர்' ஆக்கினார்

நீர்தான் மரம்செடி கொடிக்கும்
நித்தம் அதுதான் இல்லையெனில்
நேரும் துன்பம் மானிடர்க்கு
நேர்த்தி வாழ்வு தொலைந்திடுமே

ஆறு கடல்கள் குளங்களொடு
அருவி கூடத் தரும்நன்னீர்
பேறு எமக்குக் கிடைக்கவெனில்
பெரிதாய் நீரைப் பேணிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீ

தீயோ தமிழைச் சுடவில்லை
திருவாய்ப் போற்றத் தகுதியுண்டு
தீயில் நாங்கள் சமைக்கின்றோம்
தீயை அணுகல் மிகக்கவனம்

தீயைக் காயும் பொழுதினிலே
தேரும் அறிவு ஒன்றுண்டு
அகலா தணுகாத் தீய்க்காய்தல்
அவசியம் வேண்டும் எம்மவர்க்கு

தீயோ நன்மை தந்திடினும்
தேவை மக்கள் கருதாமல்
தீங்கை உலகில் செய்துவிடும்
செய்தி பலவும் நாம்அறிவோம்.

ஆக மக்கள் நாமெல்லாம்
அதனின் தேவை வேண்டுமிடம்
சோகம் பெறாத வழியினிலே
சொல்லிப் பிறர்க்கும் உதவிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்று

காற்றைக் கண்ணால் காண்பரெவர்
காற்றின் வேகம் மிகப்பெரிது
காற்றின் நன்மை பலரறிவர்
காற்று இன்றேல் வாழ்வுஇல்லை.

சோழம் வாடை சுழற்காற்று
ஆழம் எவர்தான் அறிவாரோ
வாழ்வில் மாந்தர் வளம்பெறவே
வளமாய் வந்தால் காற்றுநன்று.

திண்மம், வாயு, திரவமென
உண்மை தருவது விஞ்ஞானம்
இந்த மூன்றில் வாயுதான்
எழுந்த காற்று இதுஉண்மை.

காற்றின் பெருமை கூறவெனில்
காலம் முழுதும் கூறிடலாம்
காற்று இன்றேல் முச்சுஇல்லை
காற்று காற்று காற்றேதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாயம்

மண்ணில் விண்ணில் மக்கள்எலாம்
மறைந்தால் மலரும் நினைவுகளில்
விண்ணைச் சொல்வோம் ஆகாயம்
வேண்டும் விமானம் பறப்பதற்கு

வானம் என்பது விண்ணேதான்
வானம் மழையைத் தந்திடுமே
வானம் துளியைத் தந்திட்டால்
வதங்கும் நெல்லும் உயிர்பெறுமே.

விண்நின்று பொய்ப்பின் விரிஉலகம்
உண்ணும் உணவும் இல்லையதால்
கண்கள் போலக் கவின்தருமே
காப்போம் விண்ணைக் கூடத்தான்.

மண்ணும் விண்ணும் வளஞ்சொல்லி
வாய்த்த இலக்கிய பாடல்பல
வானம் மண்ணும் வணங்குபுகழ்
வள்ளல் பலரும் வாழ்ந்திட்டார்.

ஐந்து பெரிய பூதங்களுள்
ஆகா யம்தான் மிகப்பெரிது
அதனால் அதனின் பெருமையினை
அடித்துச் சொல்வோம் ஆமுண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி

கல்வி

கல்வித் தெய்வம் கலைமகளைக்
கரங்கள் தூக்கித் தொழுதிடுவோம்
வல்லமை மிக்க அறிவுபெற
வாழ்வில் அவளே துணையாவாள்

கல்வி கற்ற பெரியோரை
காலம் எல்லாம் மதித்திடுவோம்
மெல்லப் பணிவோம் அவர்நாடி
மேலும் அறிவைக் கூட்டிடுவோம்

வீசு புகழ்சேர் மன்னவர்கள்
மேலாம் கல்வி யாளருடன்
பேசின் பெரியோர் கல்வியினர்
பிரியம் அவர்மேல் வைப்போமே

கல்வி காலம் என்றென்றும்
கசட றத்தான் கற்போம்நாம்
தொல்லை தந்த வேளையிலே
துலங்கும் மூளை நன்றாக

கல்வி தேவை நம்வாழ்வில்
காலம் எல்லாம் காப்போமே
மேலும் வாழ்வு சிறக்கவெனில்
வேண்டும் கல்வி வேண்டுந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திறன்கள்

நாளைய உலகின் சிறுவர்நாம்
நல்ல நல்ல பிள்ளைகளாய்
வாழ வேண்டும் வளஞ்சேர்ப்போம்
வையம் புகழ வாழ்ந்திடுவோம்

கல்வி கற்ற பெரியோரைக்
காலம் எல்லாம் மதித்திடுவோம்
மெல்லப் பணிவோம் அவர்நாடி
மேலும் அறிவைக் கூட்டிடுவோம்

கல்வி. செல்வம், வீரமெனக்
காணுந் திறன்கள் மூன்றுமே
வேண்டும் வேண்டும் வேண்டுமே
தூண்டும் சக்தி துணைபெறுவோம்

விஞ்ஞா னத்தின் ஆய்வு
மேலும் கூடக் கூட
அஞ்ஞா னங்கள் அகன்று
அகிலம் வாழும் நன்கு

சிவனும் கூடச் சக்தி
இன்றி இயங்கா தென்பர்
எவரும் மறுப்பார் இல்லை
இதனால் சக்தி சக்தியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்

ஆசிரியர் சேவை அருமையான கல்வி
அகிலமெங்கும் போற்ற அமைந்ததுதான்
உண்மை

பேசுபுகழ் கூறும் அறிஞர்கவிஞர் ஆக்கம்
பெருமைமிகு கல்வி பிரியமாக அளிப்பர்

வீசுபுகழ் மன்னர் மேலவரோ டொப்ப
விஞ்சிநிற்போர் இவரே மேற்கோள்கள் பலவே
ஆசிரியர் தந்திடும் அருமருந்தாம் கல்வி
ஆகுமெழு பிறப்பும் அவனியில்யார் மறுப்பர்

கல்விகல்வி கல்வி காலமெல்லாம் கல்வி
கசடறநாம் வாழக் காட்டும் பலவழிகள்
தொல்லைவந்த வேளை துலங்கும் நல்லமூளை
தோன்றுஞ் சுக–வழிகள் சூழ்ச்சியைநாம்
வெல்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானத்தின் விந்தைகள்

விஞ்ஞா னத்தின் விந்தைகளை
விரும்பாக் குழந்தை யாருமில்லை
அஞ்ஞா னங்கள் அகல்வதற்கு
அதுவே முதன்மை மூலமன்றோ!

பொத்தான் முறுக்கப் போதும்நாம்
பூவுல கத்தின் நிகழ்வெல்லாம்
மெத்தத் தெளிவாய்க் கண்களுக்கும்
மேலும் காதும் இனிக்கவைக்கும்

காற்று வாங்க வேண்டுமா
கண்கள் ஒளியைக் காண்பதற்கும்
காதுகள் செய்தியைக் கேட்பதற்கும்
ககன அறிக்கையும் தான்தருமே

காலால் நடத்தல் கடினமதால்
காரும் பஸ்சும் சைக்கிளுமா
ஆகா யத்தில் கப்பல்
அடுத்து நீரில் கூட

மருத்துவப் பொறியியல் அல்லாமல்
வணிகக் கலைத்துறை பிறதுறைகள்
வண்ணம் பெறவும் விழிசெய்யும்
வாய்ப்பும் அதற்கு உண்டன்றோ

கணணிக் கண்டு பிடிப்பதனால்
காட்டும் விந்தைச் செயலெல்லாம்
காணும் உலகம் இன்றன்றோ!
காப்போம் விந்தை யாவையுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை

மலையே! மலையே!!

மலையே! மலையே!! உன்னருமை
மதிப்போர் யார்தான் இவ்வுலகில்
நிலையாய் நீயும் நின்றுலகில்
நித்தம் வளங்கள் சேர்க்கின்றாய்

மழையோ உன்மேற் பெய்தவுடன்
மகிழ்வாய் அருவி ஆகின்றாய்
அழகாய் அருவி குதித்துன்மேல்
அமையுங் காட்சி தானென்னே!

அருவி பலவுஞ் சேர்ந்தொன்றாய்
ஆறாய் ஆகிக் கடலோடு
பெருகிக் கலக்குங் காட்சிக்கும்
பேரா தரவு நீயன்றோ!

எங்கள் நாட்டில் நீநன்கு
இனிதாய் நிலைத்தாய் பலவிடத்தில்
தங்கம் எங்கள் நாடிதற்குத்
தலைமைச் செல்வம் நீயன்றோ

மாவலி உன்மேல் ஊற்றெடுத்து
மலியும் கிளைகள் பலகொண்டு
மேவும் வளங்கள் சேர்த்திடுமே
மெத்தப் பொலியும் ஈழமுன்னால்

மத்திய பகுதி நீயிருந்து
மகிழ்வாய் வளங்கள் தருகின்றாய்
கத்துங் கடல்கள் சூழந்திருக்கும்
காவும் பலவும் மலிகின்ற

பெற்ற தாயாம் ஈழம்மா
பெரிதும் புகழைப் பெற்றிடவே
உற்ற துணையாய் இருந்திடுவாய்
ஓங்கி நின்று வாழியவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாய் மயிலை ஆட்டவா

மழையே! மழையே!! ஓடிவா!!!
மகிழ்ச்சி தரவே ஓடிவா
விளையும் பயிரை வளர்விக்க
விருப்பம் மாய்நீ ஓடிவா.

உன்னைக் கண்டு பயப்படோம்
ஒதுங்கி நாமும் படுத்திடோம்
என்ன இன்பம் தருகின்றாய்
இனிய மழையே ஓடிவா

அருமை முகிலைக் கூட்டிவா
அழகாய் மயிலை ஆட்டவா
பெருமை யுள்ள மனிதர்கள்
பெரிதும் விரும்ப ஓடிவா

இனிய வெள்ளந் தந்திடு
இன்பத் தோணி ஓட்டிட
மனிதர் விலங்கு பயிர்களும்
மகிழ்ச்சி கொள்ள ஓடிவா

திட்டம் மெத்தப் போட்டுமே
செயற் படுத்தா மனிதர்க்கு
விட்டுக் குமிழி காட்டிட
வெள்ளங் கொண்டே ஓடிவா!

அளவு அதிகம் ஆயிடின்
அமுதும் நஞ்சு ஆகுமாம்
அளவோ டென்றும் ஓடிவா
ஆக்கம் மக்கட் களித்திடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு

ஆறு ஆறு ஆறு
அவையும் அழகில் ஒன்றே
பேறு தந்தே எமக்குப்
பெருக்கும் பொருளின் வளத்தை

மலையில் அருவி ஆகி
வழிகள் பலவில் வந்து
மக்கட் குதவ ஆறாய்
மாறும் பலவாம் திசையில்

ஆற்று நீரில் குளிப்போம்
அங்கும் மீன்கள் வாழும்
அன்னம் உண்ண உதவும்
அவையும் கருவா டாகும்

ஆற்றுப் பெருக்கு அற்று
அடிகள் சுட்ட போதும்
ஊற்றுப் பெருக்கால் உதவும்
உயர்வு ஆற்றுக் குண்டு

ஆறு இல்லா ஊர்கள்
அழகு இல்லா தமையும்
அதனால் ஆற்றின் தேவை
அறிவோம் அறிவோம் அறிவோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்

ஆற்று நீரும் மழையும்
ஊற்று நீரும் கூட
தேக்கி வைக்கும் கடலின்
திறமை சொல்வோம் நன்கு

முந்நீர் கொண்ட கடலின்
முழுமை நிறத்தை திருமால்
மொத்தம் கொண்டார் அதனால்
"முந்நீர் வண்ணன்" அவர்பேர்

கடலின் வளங்கள் பலவே
கறிக்கு உதவும் உப்பு
மீனும் கருவா டாகும்
மேவுஞ் சுவையும் சுவையே

சங்கு சிப்பி இரண்டும்
சமய வாழ்விற் தேவை
பொங்கும் கடலின் அழகு
போற்றல் வேண்டும் நாங்கள்

"கடலிற் பெரிது" என்று
காண்பர் உவமை கவிஞர்
கடலிற் குளித்து முத்தை
காண்பர் சுழியில் வல்லோர்

கப்பல் வள்ளம் பாய்மரம்
கண்டு கொள்வோம் நீர்மூழ்கி
இப்படி யாக மானிடர்க்கு
என்று முதவும் கடல்வாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மரங்கள்

மரங்கள் பலவே உலகில்
மரங்கள் மக்கட் குதவும்
பழங்கள் காய்கள் மட்டுமா
பாது காக்க நிழல்கள்

பூக்கள் பூக்கும் அழகாய்
பூசைக்கு உதவும் இறைக்கு
காக்க வேண்டும் மரமினம்
காரணம் தான் மழைக்கு

வீடு அமைக்கத் தேவை
மேலும் கதிரை மேசை
வேண்டும் அவைபோற் பலவே
விற்றால் காசும் சேரும்

செடிகள் கொடிகள் மேலாய்
தேவை மரங்கள் நமக்கு
தென்னை பனைகள் சிறப்பு
சேரா சொல்லில் கூற

வேம்பும் பலாவும் முதிரை
தேக்கு அரசும் ஆலும்
மேலும் வேறும் மரங்கள்
வேண்டும் வேண்டும் நமக்கு

பேணிக் காப்போம் வளர்ப்போம்
பெரிதாய்ப் பிறர்க்கும் சொல்லோம்
ஆணி முத்தாய் அவற்றை
அல்லும் பகலும் காப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனைமரம்

பனையின் பெருமை சொல்லப்
பக்கம் பத்துங் காணா
பனையைக் 'கற்பக தரு'வென்று
படித்த பெரியோர் சொல்வர்

பனையின் பயன்கள் பலவே
பாரில் அறிவோம் நன்கு
வீடு கட்ட மரமும்
வேலி அடைக்க ஓலை

விருப்ப மான நுங்கு
மேலும் குடிக்கப் பதநீர்
பனையின் பழத்தில் பனாட்டு
பனங்கட் டியோடு ஓடியல்

பனையின் மட்டைகள் இன்று
பறக்குது நல்ல விலையில்
வேலி கட்ட உதவும்
வேண்டும் சமையல் செய்ய

கால் நடைக்கு உணவாய்
காண்போம் பச்சை ஓலை
கடவுள் படைத்த மரங்களுள்
"கற்பக தரு"வே முதன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னைமரம்

தென்னை நல்ல தென்னையாம்
சிறந்த நல்ல தென்னையாம்
தெங்கு என்றுஞ் சொல்லுவோம்
யாழில் எங்கும் காணலாம்.

தென்னம் பிள்ளை யாய்வைப்போம்
தினமும் தண்ணீர் ஊற்றிடுவோம்
சிறப்பாய்ப் பிள்ளை வளர்ந்திடுமே
சீராய்ப் பிள்ளை மரமாக

சேர்க்கும் கஞ்சல் குப்பையும்
தேர்ந்த பனையின் ஓலையும்
நல்ல பசளை ஆகிட
நன்கு கிடங்கு வெட்டியே

புதைத்து விட்டால் போதுமே
பொலியும் பாளை வந்திடப்
பொங்கும் குரும்பை அரும்புமே
போக்கும் தாகம் இளநீராய்

ஓலை யால்வரும் பன்னாங்கோ
உதவும் பற்பல தேவைக்கு
பாளை மட்டை ஈர்க்கும்தான்
பன்னா டைகூட உதவுமே

இளநீர் முற்றிக் காயாக
எடுப்போம் பாலைக் கறிக்காக
காய்ந்த தேங்காய் நெய்தரும்
கடவு ளுக்கும் அடிப்போமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்கள்

மலர்கள் மலர்கள் மலர்கள்
உலகில் பலவே மலர்கள்
பார்க்க மட்டும் அழகா
பரப்பும் நல்ல மணமும்

உள்ள மலர்கள் யாவும்
ஒன்றா பலவா நிறங்கள்
உலக மலர்கள் வண்ணம்
ஒருவர் எண்ண முடியா

பூவும் மலரின் பெயரே
பூக்கும் அழகும் அழகே
போற்ற உதவும் இறையை
பொலியும் பெண்கள் முடியில்

முகத்தைப் பூவே என்பார்
முந்துங் கையைக் கூட
பூவாய்ப் பூவாய்ப் பூக்கும்
பூச்சி யையுங் காண்போம்.

இறைவன் முடிஅடி வைத்து
ஏத்த ஏத்த நன்று
என்றும் தெய்வத் தன்மை
ஏனோ இதழ்கள் மென்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு

அழகு அழகு அழகு
அத்த னையும் அழகு
ஆண்ட வனின் படைப்பில்
அனைத்தும் எல்லாம் அழகு

றோசாப் பூவைப் பாருங்கள்
தெரியும் தெளிவாய் அழகு
றேசில் குதிரை கூட
என்னே! அழகு அழகு

மலையும் ஆறும் கடலும்
வண்ண அழகு அழகு
மலையில் அருவி பாயும்
மழலை யும்தான் சிரிக்கும்

ஆகா யத்தைப் பாருங்கள்
அதிலும் அழகு உண்டு
அங்கே இரவில் மின்னும்
அதுதான் வெள்ளி அழகு

நிலவுக் காலம் மேகம்
நின்று பார்த்தால் நித்தம்
பகலில் வெய்யோன் பாய்ச்சும்
பாயும் ஒளியும் அழகு

அழகைச் சொல்லச் சொல்ல
அழகுத் தமிழில் சொற்கள்
ஆயி ரத்தின் அடுக்கு
அதுதானிறைவன் படைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் உண்டு

உலகம் உண்டு உண்மை
உணர்வர் அறிஞர் பெரியோர்
உண்மை நன்கு தெரிவோம்
உலகில் என்றும் வாழ்வோம்

பண்பு உடையோர் பாரில்
பலராய் எங்கும் இருத்தல்
பாலர் முதலாய் வயதோர்
பாரில் இனிது வாழ்வர்

உண்மை உண்மை உண்மை
உயர்வாய் உலகைக் காப்போம்
உலகில் மக்கள் மற்றும்
உள்ளது ஏதும் அழியா

உலகம் அழியும் என்போர்
உணர்தல் வேண்டும் உண்மை
ஒருநாள் ஏனும் உலகம்
ஒன்றும் என்றும் அழியா

உலகம் உண்டு வாழ
ஒன்றும் இல்லைக் குறைகள்
உண்டு என்றால் அதையும்
ஓங்கும் அறிவு நீக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் (அகம்)

மனம்தான் "மனிதம்" உய்விக்கும்
"மனிதம்" இன்றேல் வளமில்லை
மனத்தின் ஆழம் மனமறியும்
மற்றோர் யார்தான் அதையறிவார்

அகக்துறு நோயை அகமறியும்
அதனை மருத்துவர்க் கொழிக்கேலா
ஒழித்தால் துன்பம் அவர்க்கில்லை
ஓங்கும் துயரம் எமக்குத்தான்

மனத்தின்வேகம் மையலில் இல்லை
மனமோ நினைத்த வேளைகளில்
பாயும் உலகக் கண்டமெலாம்
பார்க்கும் உறவோர் பலரையெல்லாம்.

"மனமது சுத்தம்" என்றிட்டால்
மந்திரங் கள்தே வையில்லை
மனதைக் கடவுள் தானறிவார்
மதிப்போம் கடவுள் நெறியதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதாரச் சீர்கேடு

சுத்தம் சுத்தம் சுத்தம்
சுத்தம் இன்றேல் சோர்வே
மெத்தப் பசியோ வந்திட்டால்
வேலை கொள்ளா மனமும்தான்

வீட்டில் சுத்தம் மிகச்செய்து
மேலும் பள்ளி கோயில்கள்
வேலை செய்யும் இடமெல்லாம்
மேவும் சுத்தம் காத்திடுவோம்

அம்மா அப்பா சொல்லும்நல்
அறிவு ரைகள் கேட்டிடுவோம்
அல்லும் பகலும் நாமெல்லாம்
ஆகுஞ் சுத்தம் செய்வோமே

ஆடை அணிகள் எல்லாம்தான்
ஆகா ரத்தில் அவசியமே
பேசுஞ் சுத்தம் நாம்காத்துப்
பெரியோர் உள்ளம் கவர்வோமே

சுத்தம் சுகத்தைத் தருவதனால்
சோர்வும் நீங்கிப் போய்விடுமே
நித்தம் சுத்தம் கண்டிடுவோம்
நேரும் நல்ல வாழ்வெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போஷாக்கு

ஆகா ரத்தை ஒழுங்காக்கி
அதனால் காண்போம் சுகம்நன்றாய்
தேகம் நல்ல திடம்பெறவே
தினமும் வேண்டும் போஷாக்கு

போஷாக் கில்லா வாழ்வென்றால்
போகும் சீவன் விரைவாக
வீரம் பெறவும் தேவையன்றோ!
மேவும் கல்வி செல்வமெல்லாம்

நாளை உலகின் மன்னர்தான்
நமது பள்ளி மாணவர்கள்
வேளை எல்லாம் போஷாக்கு
வேண்டும் வேண்டும் வேண்டுமே.

புரதம் முதலாம் சத்தெல்லாம்
பொழுது உணவில் சேர்த்திட்டால்
தரமாய் வாழ்வில் பலம்சேர்ப்போம்
தரணி காத்து வாழ்ந்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின் மகிமை

பெண்ணின் பெருமை சொல்ல
பெரியோர் அறிஞர் கவிஞர்
பேசு கவிதை ஆக்கம்
பெரிதாய்ப் பெரிதாய்க் காண்போம்

இன்று நேற்று அல்ல
இறைவன் படைத்த காலம்
இன்றும் உலகம் உள்ள
ஓங்கும் காலம் வரைக்கும்

பெண்ணின் பெருமை சொல்வோர்
பெயர்த்தும் புதியோர் ஆக்கம்
பெண்மை பெண்மை போற்றும்
பெண்மை என்றும் வாழும்

கற்பு பெண்ணின் அணிகலன்
காக்க வேண்டும் பெண்ணினம்
கற்பைத் "திண்மை" என்று
காட்டு கின்றார் வள்ளுவர்.

கற்பின் செல்வி கண்ணகி
கம்பர் தந்த சீதையும்
காலன் வென்ற சாவித்(தி)ரி
கலியில் கூடக் காண்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுறங்கு கண்மணியே

கண்ணுறங்கு கண்மணியே
கண்ணுறங்கு கண்மணியே
அண்ணாவும் அக்காவும்
அருகருகில் உறங்குகிறார்
ஆராரோ ஆராரோ
ஆரிரரோ ஆராரோ
ஆரை நினைத்தழுதாய்
லண்டன் அண்ணா கதைத்தவரோ
(கண்ணுறங்கு..)

விடிவெள்ளி பூத்ததம்மா
கோழி குயில்கூவ
வெள்ளி வெளிச்சத்தால்
வீதிமரம் தெரியுதம்மா
சாலையெலாம் சத்தங்கள்
சாலஒலி மணிநாதம்
ஆலயங் களில்கேட்க
அப்பாவும் எழுந்துவிட்டார்
(கண்ணுறங்கு....)

என்கண்ணே கண்மணியே
காலைமணி ஏழுவரை
உன்கண்கள் மூடி
உறங்கம்மா கண்மணியே
பெரியண்ணா பெரியக்கா
பிரியமாய்ப் பள்ளிசெல்ல
உரிய கடமையெனக்
குண்டம்மா கண்மணியே
(கண்ணுறங்கு....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு ஆதரவு

அன்பு

அன்பு அன்பு அன்பு
அகிலம் போற்றும் அன்பு
அன்பு இல்லார் என்றும்
அறத்தைச் செய்ய மாட்டார்

அம்மா அன்பு வைப்பாள்
அப்பா அன்பு செய்வார்
அக்கா தங்கை மற்றும்
அண்ணா தம்பி கூட

அன்பை வெல்ல உலகில்
அரியது ஏதும் இல்லை
அன்பை வாழ்வில் உடையோர்
அகிலம் போற்ற வாழ்வர்

அன்பைச் சிவமே என்பர்
அதனைச் சொல்லும் (திரு)மந்திரம்
அன்பை அடைக்கும் கதவு
அவனி உயிர்க்கு இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைப் பசு

வெள்ளைப் பசுவை வீட்டினிலே
மிகவும் அன்பாய் வளர்த்திடுவோம்
அள்ளிப் புல்லும் வைக்கோலும்
அதற்கு நாங்கள் கொடுத்திடுவோம்

சிலநாட் செல்லக் கன்றீனும்
சிரிப்போம் களிப்போம் அதைப்பார்த்துப்
பலநாள் நாங்கள் பழகியதும்
பகிர்வோம் நட்பைக் கன்றுடனே

புல்லை மேயச் சென்றபசு
பொழுது பட்ட வேளையிலே
மெல்ல வீடு வந்திடுமே
விருப்பாய்க் கன்றை அழைத்திடுமே

பாலைப் பொழியும் பசுஎமக்கு
பக்குவ மாக அதைக்காய்ச்சி
காலை மாலை வேளைகளில்
கனிவாய்த் தருவாள் தாயெமக்கு

பள்ளிச் சிறுவர் நாமெல்லாம்
படிப்போம் பாடம் பசுபற்றி
வெள்ளை உள்ளம் பெற்றிடுவோம்
விரும்பிப் பாடம் கற்றிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய காவலன்

நாயைப் பேணி வளர்த்திடுவோம்
நன்றாய் நாளும் பழகிடுவோம்
வாயில் நின்று வீட்டினையே
வளமாய்க் காக்கும் நாயன்றோ!

நிசமாய் அன்பு வைத்தெம்மேல்
நீண்ட நட்புக் கொண்டிடுமே
"எசமான்" என்று எமைப்போற்றும்
இனிய காவலன் அதுவன்றோ

சோறு சொதிதான் இல்லையெனில்
சொல்லா தெவர்க்கும் ஏழ்மைநிலை
பேறு பலவும் உதவுகின்ற
பெரிய செல்வம் நாயன்றோ!

சாபம் போட்டுப் பேசிடினும்
சத்தம் வைத்தே ஏசிடினும்
கோபம் ஏதுங் கொள்ளாது
கொள்கை சிறிதும் மாறாது

நன்றி யுள்ள மிருகமதை
நாங்கள் வீட்டில் எப்போதும்
மென்று தின்னச் சோறிட்டு
மிகவும் அன்பாய் வளர்த்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமம் குறைகிறது
பாப்பாப் பா
பாடு பாப்பா
பாலர் பா
மரண நனவுகள்

ஆகிய கவிதைகளின் நூலாசிரியர்

புலவர் வே. குமாரசாமி

அவர்கள்

கவிஞர் சுகசீவன் பற்றி

பத்துக் கவிதை நூல்தந்தார்:
பாலர் சுவைக்க நால்பத்து
முத்துக் கவிதை தருகின்றார்
முதிர்ந்த மதுரக் கனியைப்போல்
சத்து மிக்க அவைஉண்ணச்
சாலச் செறிந்த வளந்தேக்கிச்
சித்தம் குளிரப்போற்று கின்றோம்
சீவா வாழி வாழியென.

கவிதை அமுதச் சுவைதேர்ந்த
கச்சா யூரில் சுகசீவன்
குவியும் உணர்வால் குழந்தைகளே
குதித்து மகிழச் சிந்தைக்கும்
செவிக்கும் இனிய பாதந்தார்
சிறந்து வாழ்க அவர்சேவை
நவமாய் மேலும் ஆலைப்போல்
நலமே பெருகப் பல்லாண்டே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பற்றி...

இவர்...

ஆசிரியப் பெருமக்கள் சிந்தையில், சிறந்த மனப்பதிவுகளை ஏற்படுத்தும் திறன் சுகசீவனிடம் இருந்தமைக்கு, அவர்தம் பள்ளிப்பருவம் - சிறந்த சான்றாய் அமையலாயிற்று. அந்தக்காலத்தில் அவரிடமிருந்த கலைத்தமிழ் ஈடுபாடானது, அவரை ஒரு பண்டிதராக்கிற்று. பண்டிதரெல்லாரும் பாவலர்களாயும் இருப்பர் என்பதற்கு எதுவித உத்தரவாதமும் இல்லையன்றோ! சுகசீவனோ, தம்தமிழ்ப் புலமையினைச் செழுமைப்படுத்திக் கொண்ட அதேவேளையில் பாட்டுக்களை விரைந்தியற்றும், ஆற்றல் வாய்ந்த பாவலனாகவும் மலர்ச்சி பெற்றார்.

பல ஆண்டுகளின் பின்னர் அண்மையிலே அவரை யான் காண நேர்ந்த பொழுது. இளம் பொழுதில் அவர்தம் உணர்வினில் எழுந்த கலை உந்தலின் ஊற்றுக்கண், இன்னும் தயார்நிலையில், "எவரெடி" ஆக நிற்கின்றமையை ஓர்ந்தபோது, பெருமையும், மனப்பூரிப்பும் உண்டாயின..

சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் ஏற்ற நல்ல பல ஆக்கங்களைத் தந்திடுவதற்கு "சுகசீவன்" திட்டமிட்டு முயன்றவாறே இருப்பது நம் சூழல் சிறந்திட உஞ்ற்றும் சீரிய தவம் எனக் கொள்வது பிழையாகாது.

"வெள்ளத்தின் பெருக்கைப்போல்... எனத் தொடங்கி" தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார். இங்கமரர் சிறப்புக் கண்டார்." என நிறைவு செய்து பள்ளியெழுச்சி பாடினார் பாரதிப் பெரும்புலவனார். அன்னாரின் வேட்கைத் தாகத்தினையும், இலட்சிய ஆவேசத்தினையும் தமதாக்கிக் கொண்டு, கச்சாயூர்க் கவிஞர் சுகசீவன், மேலும் பல பெறுமதி வாய்ந்த கலைப்படையல்களைத் தந்து, நம்மவர்க்கு நலம் செய்தல் வேண்டும். பண்பாட்டுப் பற்றாளர் எவரும் மனப்பூர்வமாக விரும்பிவரவேற்கக் கூடிய மலையிலக்கு இதுவாகத்தான் இருக்க முடியும்.

சுகசீவன் நெஞ்ச ஊற்றுச்
சுரப்பினால் ஊக்கம் பெற்று
நிகரேதும் இல்லா இன்ப
நெடும்சுனைப் பொங்கல் ஆகி
தகவாளர், திறனாய் கின்ற
சதுரப்பா டுடைய சான்றோர்
புகழ்பேசி வியக்கும் வண்ணம்
புதுப்புனல் புரண்டோ டட்டும்.

24.05.2001.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org